முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 42 - கர்நாடக சங்கீதம்

### புள்ளியிடும் திட்டம்





Department of Examinations - Sri Lanka

இப் புள்ளித்திட்டம் விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020
## 42 - கர்நாடக சங்கீதம்

கர்நாடக சங்கீத பாடநெறியானது,

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரம் | - I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் | - II | - | 60 புள்ளிகள் |
| மொத்தம் | | - | 100 புள்ளிகள் |

### புள்ளித்திட்டத் தொகுப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | கர்நாடக சங்கீத வினாப்பத்திரம் I | = | 40 x 1 | = | 40 புள்ளிகள் |
| (ஆ) | கர்நாடக சங்கீத வினாப்பத்திரம் II | = | 5 x 12 | = | 60 புள்ளிகள் |

Department of Examinations - Sri Lanka

### வினாப்பத்திரம் II

**வினா 01ம் வினா**

(i) புள்ளிகள் - 01
(ii) புள்ளிகள் - 01
(iii) புள்ளிகள் - 01
(iv) புள்ளிகள் - 01
(v) புள்ளிகள் - 01
(vi) புள்ளிகள் - 01
(vii) புள்ளிகள் - 01
(viii) புள்ளிகள் - 01
(ix) புள்ளிகள் - 02
(x) புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் = 12

**வினா 02 இற்குரிய மொத்தப் புள்ளிகள்** = 12
ஒரு இராகலட்சணத்திற்குரிய மொத்தப் புள்ளிகள் = 12

**வினா 03 இற்குரிய மொத்தப் புள்ளிகள்** = 12
ஒரு விடயத்திற்கான மொத்தப் புள்ளிகள் = 06

**வினா 04 இற்குரிய மொத்தப் புள்ளிகள்** - 12

(i) புள்ளிகள் - 04
(ii) புள்ளிகள் - 02
(iii) புள்ளிகள் - 04
(iv) புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் = 12

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா 05 இற்குரிய மொத்தப் புள்ளிகள் - 12**

(i) புள்ளிகள் - 01
(ii) புள்ளிகள் - 01
(iii) புள்ளிகள் - 02
(iv) புள்ளிகள் - 02
(v) புள்ளிகள் - 04
(vi) புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் = 12

**வினா 06 இற்குரிய மொத்தப் புள்ளிகள் - 12**

மொத்தப் புள்ளிகள் = 12

**வினா 07 இற்குரிய மொத்தப் புள்ளிகள் - 12**

(i) புள்ளிகள் - 03
(ii) புள்ளிகள் - 09

மொத்தப் புள்ளிகள் = 12

**அல்லது**

**மறுவினாவிற்கான மொத்தப் புள்ளிகள் - 12**

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

### விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................
............................................................
............................................................ ✓ $\frac{4}{5}$

(ii) ............................................................
............................................................
............................................................ ✓ $\frac{3}{5}$

(iii) ............................................................
............................................................
............................................................ ✓ $\frac{3}{5}$

**மொத்தம்** ⟶ $\frac{10}{15}$

**பல்தேர்வு விடைத்தாள்**

**துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**✶ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலங்கள்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## கர்நாடக சங்கீதம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த இலக்கத்தை கொண்டிருக்கும் வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

Department of Examinations - Sri Lanka

**1.** 'சிவபெருமானே' எனும் கீதம் அமைந்துள்ள இராகம்
(1) பிலஹரி
(2) சங்கராபரணம்
(3) மாயாமாளவகௌளை
(4) மத்யமாவதி

**2.** 'தகிட' எனும் சொற்கட்டு அமைந்த நடை
(1) திஸ்ர நடை
(2) சதுஸ்ர நடை
(3) கண்ட நடை
(4) மிஸ்ர நடை

**3.** பஞ்சபுராணம் பாடப்படும் ஒழுங்கில் 'திருப்பல்லாண்டு' எத்தனையாவதாக அமைந்துள்ளது?
(1) 2 ஆவதாக
(2) 3 ஆவதாக
(3) 4 ஆவதாக
(4) 5 ஆவதாக

**4.** பின்வருவனவற்றுள் 'அவனத்த வாத்தியம்' எனப்படுவது
(1) மிருதங்கம்
(2) நாதஸ்வரம்
(3) வீணை
(4) தவில்

**5.** முத்துஸ்வாமி தீட்சிதர் காஞ்சிபுரத்தில் கமலமனோஹரி இராகத்தில் பாடிய கிருதி
(1) அக்ஷய லிங்க
(2) ஸ்ரீ நாதாதி
(3) கஞ்சதளாய தாட்சி
(4) கமலாம்பா நவாவரணம்

**6.** 'உற்றுமை சேர்வது' என்ற தேவாரம் பாடப்படும் பண்
(1) தக்க ராகம்
(2) பழம்பஞ்சுரம்
(3) செவ்வழி
(4) செந்துருத்தி

**7.** 72 மேளகர்த்தா சக்கரங்களுள் பாண சக்கரத்தில் அமைந்துள்ள மேள எண்கள்
(1) 25 - 30
(2) 31 - 36
(3) 43 - 48
(4) 55 - 60

**8.** திருவிசைப்பா பாடப்படுவது
(1) இராக, தாள முறையிலாகும்.
(2) இராகமாலிகை முறையிலாகும்.
(3) சுத்தாங்க முறையிலாகும்.
(4) பண்ணாங்க முறையிலாகும்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

9. 'சௌக்க வர்ணம்' என அழைக்கப்படுவது
(1) நவராகமாலிகா வர்ணம் (2) அடதாள வர்ணம்
(3) ஜம்பை தாள வர்ணம் (4) பத வர்ணம்

10. 'காரைக்கால் அம்மையார் சரித்திரம்' எனும் இசை நாடகத்தினை இயற்றியவர்
(1) க. பொன்னையாப்பிள்ளை (2) கோபாலகிருஷ்ண பாரதியார்
(3) மாயூரம் வேதநாயகம்பிள்ளை (4) சிதம்பரம் பொன்னுசாமி தீட்சிதர்

11. விரல்களினால் 'மீட்டுதல்' எனும் தொழிற்பாட்டுடன் ஓசையினை உண்டாக்கும் இசைக்கருவி
(1) வீணை (2) புல்லாங்குழல் (3) மிருதங்கம் (4) வயலின்

12. 'மபதஸ் - ததபபமகரிரி - ஸரிஸநிதா' எனும் சஞ்சாரம் வெளிப்படுத்தும் இராகம்
(1) ஆரபி (2) ஹரஹரப்ரியா (3) ஹரிகாம்போதி (4) மத்தியம

13. "இனி நமக்கொரு கவலையுமில்லை" எனும் கீர்த்தனை அமைந்துள்ள தாளம்
(1) ஆதி (2) ரூபகம் (3) ஜம்பை (4) ஏகம்

14. பதங்களில் இயற்றியவரின் முத்திரை காணப்படுவது
(1) பல்லவியில், முதல் சரணத்திலாகும். (2) அனுபல்லவியில், முதல் சரணத்தி
(3) அனுபல்லவியில், கடைசிச் சரணத்திலாகும். (4) பல்லவியில், அனுபல்லவியிலாகும்

15. இராகமாலிகையில் பல்லவியின் ஆரம்ப இராகத்தில் அமையும் சிட்டைஸ்வரம்
(1) மத்திமகால ஸ்வரம் (2) மகுட ஸ்வரம்
(3) முக்தாயிஸ்வரம் (4) விலோம சிட்டைஸ்வரம்

16. அடதாள அலங்காரத்தின் ஆரம்ப வரிசை குறிப்பது
(1) ஸரீகா | ஸாரிகா | மா | மா || (2) ஸரிகரி | ஸரி | ஸரிகம ||
(3) ஸரிகம | கரி | ஸரிகரி | ஸரிகம || (4) ஸரிக | ஸரி | கம ||

17. 'ரேவதி ராகம்' எனும் இலட்சண கீதத்தினை இயற்றியவர்
(1) கோபாலகிருஷ்ண பாரதியார் (2) க. பொன்னையாப்பிள்ளை
(3) திலகநாயகம் போல் (4) பொன். ஸ்ரீவாமதேவன்

18. 72 மேளகர்த்தா இராகங்களில் 4 ஆவது, 10 ஆவது சக்கரங்களில் இடம்பெறும் ரிஷப ஸ்வரப்பெயர்கள் குறிக்கும் சங்கேதாட்சரங்கள் முறையே
(1) ர, கி (2) ரி, கி (3) ரி, கு (4) ரு, கு

19. மாணவர்கள் ஸ்வரக்கோர்வைகளை ஆக்கம் செய்து பாடுவதன் மூலம் வெளிப்படுவது
(1) சாஹித்ய ஞானம் (2) சுருதி ஞானம் (3) ஸ்வர ஞானம் (4) லய ஞ

20. 'உன்னையல்லால்' எனும் சிம்மேந்திரமத்திம இராகக் கீர்த்தனை அமைந்துள்ள எடுப்பு
(1) சம எடுப்பு (2) அனாகத எடுப்பு (3) அதீத எடுப்பு (4) துரித

21. சுத்த நிஷாதத்துக்கு ஒப்பான ஸ்வரஸ்தானம்
(1) சாதாரண காந்தாரம் (2) சதுஸ்ருதி ரிஷபம்
(3) சதுஸ்ருதி தைவதம் (4) கைஷிகி நிஷாதம்

22. பின்வருவோருள் வயலின் வாத்திய அமைப்பினை முதலில் உருவாக்கியவர் யார்?
(1) பாலுஸ்வாமி தீட்சிதர் (2) ஸ்ட்ராடி வேரியஸ்
(3) பீதோவன் (4) சுப்பராம தீட்சிதர்

23. 'சின்னஞ்சிறுகிளியே' எனத் தொடங்கும் இராகமாலிகையில் 'உச்சிதனை முகர்ந்தால்' என்ற அமைந்துள்ள இராகம்
(1) வஸந்தா (2) நீலமணி (3) திலங் (4) மாண்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

24. பின்வரும் இராகங்களுள் பிரதி மத்யமத்தை எடுத்துக்கொள்ளும் இராகம்
(1) ஹரிகாம்போதி (2) ஆரபி (3) மத்தியமாவதி (4) பந்துவராளி

25. ஸ்வரமேள கலாநிதி எனும் சமஸ்கிருத கிரந்தத்தை ஆக்கியவர்
(1) ராமாமாத்யர் (2) கோவிந்தாச்சாரியார்
(3) புரந்தரதாஸர் (4) வேங்கடமகி

26. கதலி ரஸத்திற்கு ஒப்பான உருப்படிகளை இயற்றியவர்
(1) தியாகராஜ சுவாமிகள் (2) முத்துஸ்வாமி தீட்சிதர்
(3) சியாமா சாஸ்திரிகள் (4) கோபாலகிருஷ்ண பாரதியார்

27. மிருதங்க இசைக்கலைஞர்கள் கச்சேரிகளில் தமது திறமையை வெளிக்காட்டக் கையாளும் வாசிப்பு முறை
(1) அரை ஆவர்த்தனம் (2) தனி ஆவர்த்தனம்
(3) முழு ஆவர்த்தனம் (4) ஜதி ஆவர்த்தனம்

28. உரைக்கிடையே பாட்டும் நகைச்சுவையும் சேர்ந்து இடம்பெறும் இசை நிகழ்வு
(1) தாளலயம் (2) இசைநாடகம் (3) பல்லியம் (4) வில்லுப்பாட்டு

29. 'அள்ளி உண்டிடலாம்' எனும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் மேள எண்
(1) 15 (2) 22 (3) 51 (4) 65

30. ஹரிகாம்போதி இராகத்தின் மத்திம மூர்ச்சனை மூலம் உண்டாகும் இராகம்
(1) கல்யாணி (2) நடபைரவி (3) கரஹப்பிரியா (4) சங்கராபரணம்

31. ஹிந்துஸ்தானி இசை நிகழ்வுகளுக்கும் மேலைத்தேய இசை நிகழ்வுகளுக்கும் இடையே வேறுபடும் தனித்துவமான அம்சம்
(1) இசைக் கலைஞர்கள் (2) வாத்திய ஒருங்கிணைவு
(3) மேடை அமைப்பு (4) கொண்டு நடாத்துபவர்

32. 'மாணினேர்விழி' எனும் தேவாரம் அமைந்துள்ள தாளம்
(1) கண்டசாபு (2) மிஸ்ர சாபு (3) ரூபகம் (4) ஆதி

33. சங்கேதாட்சர முறையை ஏற்படுத்தியவர்,
(1) தஞ்சாவூர் வைத்தியநாதையர் ஆவார் (2) ஹரிபாலர் ஆவார்
(3) கோவிந்த தீட்சிதர் ஆவார் (4) வேங்கடமகி ஆவார்

34. "தானவர்ண மார்க்கதரிசி" என சிறப்பு பெயர்பெற்ற வாக்கேயகாரர்
(1) பச்சிமிரியம் ஆதியப்பையர் (2) பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள்
(3) முத்துஸ்வாமி தீட்சிதர் (4) கோபாலகிருஷ்ண பாரதியார்

35. திரம சாபு தாளத்தின் எதிர்ப்பதம் குறிப்பிடப்படுவது
(1) கண்ட சாபு (2) மிஸ்ர சாபு (3) விலோம சாபு (4) சங்கீர்ண சாபு

36. கனம் என்னும் மார்க்கத்தை சாதித்துக் காட்டியவர்
(1) கோவிந்தாச்சாரியார் (2) அருணாச்சலக்கவிராயர்
(3) பொப்பிலிகேசவய்யா (4) புரந்தரதாஸர்

37. புல்லாங்குழலின் முகரந்திரத்துளைக்கு மிக அருகில் உள்ள துவாரம்
(1) ஸ்வராந்திரம் (2) முத்திரைத்துளை (3) நாதரந்திரம் (4) தாரரந்திரம்

38. $|_9 0 |_9$ எனும் அங்கம் குறிக்கும் தாளம்
(1) சங்கீர்ணஜாதி மட்டிய தாளம் (2) சங்கீர்ணஜாதி ரூபகதாளம்
(3) மிஸ்ரஜாதி திரிபுடைதாளம் (4) கண்டஜாதி அடதாளம்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**39.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - கதாப்பாத்திரங்களின் பங்களிப்பு முக்கியமானது.
B - வாத்தியங்களின் பங்களிப்பு அவசியமானது.
C - உரையாடலாலான ஆற்றுகை முறையைக் கொண்டது.
D - பங்குபற்றுனர்களின் ஒத்திசைவு அவசியமானது.

மேற்கூறியவற்றுள் பல்லிய இசை நிகழ்ச்சி பற்றிய சரியான கூற்றுக்களை மாத்திரம் கொண்ட சோ

(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

- பலா மரத்தினால் செய்யப்பட்டது.
- இராஜ வாத்தியம் என்னும் பெயரைக் கொண்டது.
- வெண்டயம் எனும் பாகத்தைக் கொண்டது.
- மல்லாரி வாசிப்பு முறைக்கு உரித்தானது.

மேற்கூறிய கூற்றுகளுடன் தொடர்புடைய வாத்தியம்

(1) தவில் (2) நாதஸ்வரம் (3) வீணை (4) மிருதங்கம்

* *

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසාගයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **42**　　විෂයය / பாடம்: **கர்நாடக சங்கீதம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 3 | 31. | 4 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 1 | 33. | 4 |
| 04. | 1,4 | 14. | 3 | 24. | 4 | 34. | 1 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 1 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 2 | 37. | 4 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 4 | 38. | 1 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 3 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 4 | 40. | 1 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිදසුන / உதாரணம்

| | |
|---|---|
| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை | 25 / 40 |
| I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25 / 40 |


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கர்நாடக சங்கீதம் II

**வினா இலக்கம் 1 இற்கான குறிக்கோள்**
உருப்படிகள், வாக்கேயகாரர்கள், சப்ததாளங்கள், இராக இலட்சணம், இந்திய சங்கீதம், வாத்தியக் கருவி
போன்றவை பற்றிய அறிவினை வெளிப்படுத்துவர்.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
   (i) விவாதி மேளங்களின் எண்ணிக்கை எத்தனை?
   (ii) பண்டைய காலத்தில் இராக கதம்பம் என அழைக்கப்பட்ட உருப்படி எது?
   (iii) முத்துத்தாண்டவர் இயற்றிய பதங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன?
   (iv) வீணையின் தாள தந்திகளுள் முதலாவது தந்தியின் பெயர் யாது?
   (v) குருகுலவாச முறை வழக்கத்திற்கு வந்த நூற்றாண்டு எது?
   (vi) மிருதங்கத்தின் உடலுக்கும் வாருக்கும் இடையே உள்ள உருளையான கட்டையின் பெயர் என்
   (vii) 8 எனும் தாளக்குறியீட்டின் பெயரினைக் குறிப்பிடுக.
   (viii) தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியினைத் தருக.
   (ix) அப்பியாச கான உருப்படிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (x) இராகமாலிகைகளாக அமையும் உருப்படிகள் **இரண்டு** தருக.

i. 40 (01 புள்ளி)

ii. இராகமாலிகை (01 புள்ளி)

iii. பேரின்பப்பதங்கள் (01 புள்ளி

iv. பக்கஸாரணி (01 புள்ளி

v. 18 ஆம் நூற்றாண்டு (01 புள்ளி

vi. புள் (01 புள்ளி

vii. குரு (01 புள்ள

viii. தானவர்ணம் (01 புள்ள

ix. கீதம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி, வர்ணம், அப்பியாச வரிசைகள் (02 புள்

x. ஜதீஸ்வரம், வர்ணம், கீர்த்தனை, விருத்தம், ஸ்லோகம், பத்யம் (02 புள்

மொத்தப் புள்ளிகள் $1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 2 + 2 = 12$ புள்ளிகள்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Department of Examinations - Sri Lanka

**வினா 02 இற்கான குறிக்கோள்**

இராகத்தின் இலட்சணத்தை விபரித்து உருப்படிகள் சஞ்சாரங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

2. பின்வரும் இராகங்களுள் ஏதேனும் **ஓர்** இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.
   (i) கல்யாணி
   (ii) ஆரபி
   (iii) தோடி

i. **கல்யாணி**

65 ஆவது மேளகர்த்தா இராகம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்
  அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்
  ஷட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  பிரதி மத்திமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  காகலி நிஷாதம்
  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்களாகும்
  என எழுதியிருப்பின் (01 புள்ளி)

- முதன் முதலில் மனிதனுடைய பார்வைக்கு வந்த பிரசித்தி பெற்ற பிரதிமத்திம இராகமாகும்.

- சம்பூர்ண இராகம். அனேக ஜன்ய இராகங்களைக் கொண்ட இராகமாகும்.

- ஜண்டை ஸ்வரப்பிரயோகங்களும், தாட்டு ஸ்வரப்பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராக ரஞ்சகமானவை.

- எப்போதும் பாட உகந்த இராகம். எனினும் மாலை வேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும்.

- சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகமாகும்.

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- மூர்ச்சனாகாரக மேள இராகம்.

இதன் ரிஷப, காந்தார, பஞ்சம, தைவத, நிஷாத ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்ய முறை ஹறிகாம்போஜி, நடபைரவி, சங்கராபரணம், கரஹறப்பிரியா, தோடி போன்ற இராகங்கள் உண்டாகும்.

இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் கொடுக்கப்பட்டிருப்பின் (03 புள்ளிகள்)

- உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | பதம் தருவாய் | - | ஆதி |
| வர்ணம் | - | வனஜாஷிரோ | - | ஆதி |
| கிருதி | - | நிதிசால | - | சாபு |
| | - | ஆடும் கலாபமயில் | - | ஆதி |
| | - | வாசுதேவயனி | - | ஆதி |
| கிருதி | - | ஏதாவுனரா | - | ஆதி |
| | | ஹிமாத்ரிஸுதே | - | ரூபகம் |
| | | கமலாம்பஜரே | - | ஆதி |
| கீர்த்தனை | - | ஸ்ரீ ராஜராஜேஸ்வரி | - | ஆதி |

இவ் இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிக

- சஞ்சாரம்

பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதியிருப்பின் (01 புள்ளி)

மொத்தப் புள்ளிகள் = 12 புள்ளி

ii. ஆரபி

- இது 29 ஆவது மேளமான சங்கராபரணத்தின் ஜன்யம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆரோகணம் : ஸரிமபதஸ்

அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ

எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள் :

ஸட்ஜம்

சதுஸ்ருதி ரிஷபம்

அந்தர காந்தாரம்

சுத்த மத்திமம்

பஞ்சமம்

சதுஸ்ருதி தைவதம்

காகலி நிஷாதம்

எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- இராகச்சாயா ஸ்வரங்கள் - ரிஷபம், மத்திமம், தைவதம்
  நியாச ஸ்வரங்கள் - ரிஷபம், பஞ்சமம்
  கம்பித ஸ்வரங்கள் - ரிஷபம், தைவதம்
  கிரக ஸ்வரங்கள் - ரிஷபம், பஞ்சமம், தைவதம்
  இவற்றுள் 2 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- வர்ஜராகம், ஆரோகணத்தில் மட்டும் காந்தாரம், நிஷாதம் வர்ஜம்
- ஔடவ சம்பூர்ணராகம் - உபாங்க ராகம்
- கனராகம், பிரசித்தி பெற்ற கனபஞ்சக இராகங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்த இராகத்தின் சாயலை மத்திமகாலம் அல்லது தானம் வாசிப்பதன் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.
- நிஷாதம், காந்தாரம் இவ் இராகத்தின் அல்ப ஸ்வரங்கள். நிஷாதம் இல்லாமலே சில உருப்படிகள் உள்ளன.
- காந்தாரம், ஒரு துர்பல ஸ்வரமாகும். இதனை தீர்க்கமாகவோ, அழுத்தமாகவோ ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது.
- மா, கரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சகப் பிரயோகம்
- எப்பொழுதும் பாடலாம்.
- மங்களகரமான இராகம்.
- கச்சேரியின் ஆரம்பத்தில் பாடத் தகுதியான இராகம்.
- மூர்ச்சனாகாரக ஜன்ய ராகம்
  இதன் ரி, ம, ப ஸ்வரங்களை கிரஹபேதம் செய்ய முறையே ஆபேரி, மோகன கல்யாணி, கேதாரகௌளை இராகங்கள் உண்டாகும்.
- பண் : பழந்தக்க ராகம்
- ரௌத்திர ரஸம் பொருந்திய இராகம்

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்)

- சஞ்சாரம்
  பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருப்பின் (01 புள்ளி)

- உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | வாரணமுகா | - | ஆதி |
| வர்ணம் | - | அன்னமே | - | ஆதி |
| வர்ணம் | - | ஸ்வாமி உன்னை | - | ஆதி |
| பஞ்சரத்தினம் | - | ஸாதிஞ்சனே | - | ஆதி |
| கிருதி | - | ஸ்ரீ சரஸ்வதி | - | ரூபகம் |
| கிருதி | - | ஒருக்கால் சிவ | - | ஆதி |

ஆரபி இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. தோடி

- 8 வது மேளகர்த்தா இராகம் (01 புள்ளி)

  எனக் கொடுக்கப்பட்டிருப்பின்

- ஆரோகணம் - ஸரிகமபதநிஸ்

  அவரோகணம் - ஸ்நிதபமகரிஸ (02 புள்ளிகள்)

  எனக் கொடுக்கப்பட்டிருப்பின் -

- ஸ்வரஸ்தானம்

  ஸட்ஜம்

  சுத்த ரிஷபம்

  சாதாரண காந்தாரம்

  சுத்த மத்திமம்

  பஞ்சமம்

  சுத்த தைவதம்

  கைசிகி நிஷாதம் (02 புள்ளிகள்)

  எனக் கொடுக்கப்பட்டிருப்பின்

- க, ம, த இராகச்சாயா ஸ்வரங்கள்
- பஞ்சம வர்ஜ ஜண்டை ஸ்வரப்பிரயோகங்களும் நிக்ரிநி - தநிரிநிதம - ககமநிதமகரிஸ போன்ற தாட்டு ஸ்வரப்பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை
- தரிஸ்தா ரிஸ்தா போன்ற சஞ்சாரங்கள் விசேட பிரயோகங்களாகும்
- பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம் (01 புள்ளி)

  இவற்றுள் எவையேனும் 2 விடயங்கள் கொடுக்கப்பட்டிருப்பின்

- மூர்ச்சனாகாரக மேள இராகம்.

  ரி, க, ம, த, நி ஸ்வரங்களை கிரகபேதம் செய்ய முறையே கல்யாணி, ஹரிகாம்போஜி, நடபைரவி சங்கராபரணம், கரஹரப்பிரியா ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- எல்லா உருப்படிகளையும் இந்த இராகத்தில் காணலாம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கு ஏற்ற இராகம்.
- ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம்.
- விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.
- தோடி ஸீதாராமய்யர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்.
- கடபயாதி ஸங்க்யைக்காக ஹனுமதோடி என்று அழைக்கப்பட்டது

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்

சஞ்சாரம் (01 புள்ளி

பொருத்தமான ஸ்தாயிக்குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருப்பின்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | கலைமகளே | - | ரூபகம் |
| வர்ணம் | - | ஏராநாபை | - | ஆதி |
| வர்ணம் | - | கனகாங்கி | - | அட |
| கிருதி | - | கொலுவமரெகதா | - | ஆதி |
| கிருதி | - | தாசரதே | - | ஆதி |
| கிருதி | - | ஆரகிம்பவே | - | ரூபகம் |
| கிருதி | - | கடைக்கண் நோக்கி | - | ஆதி |
| கிருதி | - | எந்துகுதயராது | - | திரிபுடை |
| கிருதி | - | தாமதமேன் ஸ்வாமி | - | ஆதி |
| பதம் | - | எல்லா அருமைகளும் | - | ஆதி |

இவற்றுள் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா 3 இற்கான குறிக்கோள்**
பதத்தின் இலட்சணம், இயற்றியவர், உதாரணம் போன்றவற்றையும் ஜன்னியராகப் பிரிவுகள், குறியீடுக
தொடர்பான விரிவான விளக்கத்தினையும் அளிப்பர்.

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.
   (i) பதம்
   (ii) ஜன்னிய இராகப் பிரிவுகள்
   (iii) இசைக் குறியீடுகள்

i. **பதம்**

- நாயகன், நாயகி பாவமான உருப்படியாகும்.
- பதங்களை இயற்றிய வாக்கேயக்காரர்கள் பதங்களில் வரும் நாயகன், நாயகி, சகி எனும் பாத்திரங்க வாயிலாகத் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.
- பதங்களில் கேட்பது எளிய சொற்களாக இருந்தாலும் அவை உயர்ந்த கருத்தை உணர்த்துகின்றது.
- மதுரபாவமான உருப்படியாகும்.
- நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி எனினும் மனதைக் கவரும்படியான அழகிய இசை மெட்டி அமைந்துள்ளமையால் இசைக் கச்சேரிகளிலும் பாடப்படுகின்றன.
- பகிர் சிருங்காரம், அந்தர் பக்தி என்னும் இரட்டைத் தாற்பரியத்துடன் கூடிய சாகித்யமே பதத்தில் விசே அம்சமாகும்.
- பதமானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டது. ஒன்றிற்கு மேற்ப சரணங்களும் உண்டு.
- சரணங்கள் ஒரே தாதுவில் பாடப்படும். தாதுவில் சங்கதிகளும், கடின சஞ்சாரங்களும் காணப் மாட்டாது.
- இயற்றியவரின் முத்திரை அனுபல்லவியிலோ, கடைசி சரணத்திலோ காணப்படும்.
- தமிழ்ப்பதங்கள் முருகப்பெருமான் மீதும் தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபிரான் மீதும் பாடப்பட்டுள்ளன
- பதங்களில் ஏளனப் பதங்கள், நகைச்சுவைப் பதங்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் எவையேனும் 8 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (04 புள்ளிகள்)

பதங்களை இயற்றியவர்கள்

தமிழ்ப்பதங்கள்
- முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சரபாரதி, கனம் கிருஷ்ணய்யர், மாம்பழக்கவிராயர், ஊத்துக்காடு வெங் சுப்பையர்.

தெலுங்குப்பதங்கள்
- ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், சாராங்கபாணி, கஸ்தூரி ரங்கர், மெரட்டூர் வெங்கட்ராம சாஸ்திரி

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பதங்களுக்கு உதாரணம் :

| | | |
|---|---|---|
| வேலவரே | - | பைரவி |
| தெருவில் வாரானோ | - | கமாஸ் |
| வேலனை அணைந்தால் | - | கமாஸ் |
| பால்வடியும் முகம் | - | நாட்டைக்குறிஞ்சி |
| திருவொற்றியூர் தியாகராஜன் | - | அடானா |
| அலைபாயுதே | - | கானடா |
| மாயன் குழலிசையில் | - | ஹம்சநாதம் |

இவற்றுள் எவையேனும் ஒன்றினைக் குறிப்பிட்டிருப்பின் (O1 புள்ளி)

ii. ஜன்னிய இராகப் பிரிவுகள்

**உபாங்க இராகம்**

தாய் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் இராகம் உபாங்க இராகம் ஆகும்.

எடுத்துக்காட்டு : மோகனம்

**பாஷாங்க இராகம்**

தாய் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களோடு இரஞ்சனையின் பொருட்டு வேறு ஸ்வரஸ்தானங்களும் கலந்திருப்பின் அதனை பாஷாங்க இராகம் எனப்படும்.

எடுத்துக்காட்டு : பிலகரி

**வர்ஜ இராகம்**

ஓர் இராகத்தின் ஆரோகணத்திலோ அல்லது அவரோகணத்திலோ அல்லது ஆரோகண அவரோகணத்திலோ ஒரு ஸ்வரமோ அல்லது இரண்டு ஸ்வரங்களோ அல்லது மூன்று ஸ்வரங்களோ விலக்கப்பட்டிருப்பின் அதனை வர்ஜ இராகம் எனலாம்.

எடுத்துக்காட்டு : மத்தியமாவதி

**வக்ர இராகம்**

ஓர் இராகத்தின் ஆரோகண அவரோகணம் ஒழுங்காக செல்லாது ஒழுங்கின்றி செல்லும் அதனை வக்ர இராகம் எனப்படும்.

எடுத்துக்காட்டு : கமாஸ், ஆனந்தபைரவி

**நிஷாதாந்திய இராகம்**

மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் நிஷாதாந்திய இராகம்.

எடுத்துக்காட்டு : நாதநாமக்கிரியை

**தைவதாந்திய இராகம்**

மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் தைவதாந்திய இராகம்.

எடுத்துக்காட்டு : குறிஞ்சி

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**பஞ்சமாந்திய இராகம்**

மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் பஞ்சமாந்திய இராகம் ஆகும்.

எடுத்துக்காட்டு : நவரோஜ்

இவற்றுள் எவையேனும் 6 பிரிவுகளுக்கு விளக்கம் கொடுத்து பொருத்தமான உதாரணம் ஒன்று கொடுக்கப்பட்டிருப்பின் 06 புள்ளிகள்

iii. **இசைக் குறியீடுகள்**

- குறில் ஸ்வரம் - ஸ - 1 அட்சரகாலம்

  நெடில் ஸ்வரம் - ஸா - 2 அட்சரகாலம்

- கார்வைகளின் காலப் பிரமாணம்

  , - 1 அட்சரகாலம்

  ; - 2 அட்சரகாலம்

- ஸ்வரங்களுக்கு மேல் படுக்கைக்கோடு

  ஸ - 1 அட்சரகாலம்

  ஸ - 1/2 அட்சரகாலம்

  ஸ - 1/4 அட்சரகாலம்

- ஸ்தாயிக் குறியீடுகள்

  மந்திரஸ்தாயி - ஸ̣ரி̣க̣ம̣

  மத்தியஸ்தாயி - ஸரிகம

  தாரஸ்தாயி - ஸ்ரிக்ம்

- இதர குறியீடுகள்

  ✷ - அன்னிய ஸ்வரம்

  ~~ - அசைவு / கமஹம்

  / - ஏற்ற ஜாரு

  \ - இறக்க ஜாரு

  ⌒ - வளைவு கோடு

இவ்வாறு கொடுக்கப்பட்டிருப்பின் 6 புள்ளிகள்

இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 6 + 6= 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

னா 4 இற்கான குறிக்கோள்



- நாதஸ்வர வாத்தியத்தின் படத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறிப்பிட்டு, வாத்தியத்தின் அமைப்பு, சிறப்பம்சங்கள், பிரபல்யமான வித்துவான்கள் என்பவற்றை விளக்குவர்.

(i) நாதஸ்வரத்தின் படத்தினை வரைந்து பாகங்களைப் பெயரிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iii) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைத்** தருக.

(iv) இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யமடைந்த வித்துவான்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

i.




நாதஸ்வரத்தின் படம் வரைந்து பாகங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருப்பின்

படம் - 02 புள்ளிகள்

பாகங்கள் - 02 புள்ளிகள்

(04 புள்ளிகள்)

i. - வட்ட வடிவமாக விரிந்து காணப்படும் அணைசு.

- உள்ளே கூடான நீண்ட மரக் குழலாலான கூம்பு வடிவ உடல் (2 முதல் 2 1/2 அடி நீளம்)
- உடலின் மேல் பொருத்தப்படும் கெண்டை.
- கெண்டைக்கு மேல் அவ்வப்போது வைத்து இசைக்கப்படும் சீவாளி. ( இதற்கு நறுக்கு என்றும் பெயர் உண்டு)
- மரக்குழாயில் வரிசையாக 7 ஸ்வரத் துளைகளும் பக்கங்களில் ஸப்தத்தை வகைப்படுத்தும் துவாரங்கள் ஐந்தும் காணப்படுகின்றன.
- தேவைக்கேற்ப உபயோகித்துக் கொள்ள நறுக்குகளும் (சீவாளி) ஒரு குச்சியும் உள்ளன.
- நீளம் அதிகமானதாகவும், ஆதார சுருதி குறைவானதாகவும் உள்ள பாரி நாதஸ்வரம், நீளம் குறைவாகவும், ஆதார சுருதி கூடியதாகவும் உள்ள திமிரி நாதஸ்வரம் அமைப்பில் இரு வகைகளாகக் காணப்படுகின்றன.

இவற்றுள் 4 விடயங்கள் எழுதப்பட்டிருப்பின்

(04 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. - கோயில் திருவிழாக்கள், கல்யாண வைபவங்கள், ஊர்வலங்கள் மற்றும் மங்களகரமா வைபவங்களிலும் தனிச்சிறப்புடன் விளங்கும் வாத்தியமாகும்.

- நாதஸ்வரத்திினின்றும் வெளிப்படும் நாதம், கனமுள்ளதாகவும், வெகுதூரம் கேட்கக்கூடியதாக இருக்கும்.
- இவ்வாத்தியத்தில் வாசிக்கப்படும் மல்லாரி இசையானது இறைவன் வீதி உலாவிற்குப் புறப்படுவதை கோயிலைச் சுற்றியும், பக்கத்து ஊர்களுக்கும் தெரியப்படுத்தும் தன்மை கொண்டது.

இவற்றுள் எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

iv. - திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை

- காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை
- திருப்பாம்புரம் நடராஜசுந்தரம்பிள்ளை
- திருவீழிமிழலை சுப்ரமணியபிள்ளை
- உருத்திராபதி
- என். கே. பத்மநாதன்
- பஞ்சாபிகேசன்
- கானமூர்த்தி
- பஞ்சமூர்த்தி
- பாலமுருகன்
- குமரன்

இவர்களுள் எவரேனும் இருவரைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் $4 + 4 + 2 + 2 = 12$ புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா 5 இற்கான குறிக்கோள்**

தியாகராஜரின் பிறப்பு, வாழ்ந்த காலப்பகுதி, இசைக்காற்றிய பணிகள் மற்றும் சிஷ்யர்கள் போன்ற விடயங்களை ஆராய்வர்.

5. தியாகராஜ சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்குக.

(i) பிறந்த இடம்

(ii) வாழ்ந்த காலப்பகுதி

(iii) இவர் இயற்றிய,

(a) **இரண்டு** இசைநாடகங்கள்

(b) **இரண்டு** கீர்த்தனைகள்

(iv) இவரது வாழ்வில் நிகழ்ந்த **இரண்டு** அற்புதங்கள்

(v) இவரது சிஷ்யர்கள் **இருவரின்** பெயர்கள்

Department of Examinations - Sri Lanka

i. பிறந்த இடம் திருவாரூர்

(01 புள்ளி)

ii. 1767 - 1847

(01 புள்ளி)

iii. a. - பிரகலாத பத்தி விஜயம்
- சீதாராம விஜயம்
- நௌகா சரித்திரம்

இவற்றுள் எவையேனும் 2 விடயங்கள் எழுதியிருப்பின்

(02 புள்ளிகள்)

b. - திவ்யநாமக் கீர்த்தனைகள்
- உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள்
- பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்
- கோவூர் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்
- "தொரகுனா இடுவண்டி சேவா" - பிலஹரி
- "நிதிசால ஸுகமா" - கல்யாணி
- "பாலகனகமைய" - அடாணா
- "நன்னுபாலிம்ப" - மோஹனம்
- "நாரதகானலோல" - அடாணா
- "சியாமஸுந்தராங்க" - தன்யாஸி

இவற்றுள் எவையேனும் 2 விடயங்கள் எழுதியிருப்பின்

(02 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iv. **அற்புதங்கள்**

- திருப்பதியில் கடவுளைத் தரிசிக்கச் சென்றபோது அங்கே திரை மூடியிருந்ததால் கௌளி இராகத்தில் "தெரதீயகராதா" என்ற கிருதியைப் பாடிய போது திரை விலகியது.

- ஹரிதாஸ் சன்னியாசி கூறியபடி தியாகராஜர் 96 கோடி முறை இராம நாமத்தை உச்சரித்த ( ஸ்ரீ ராமபிரான் ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்துடன் காட்சியைத் தந்து மறைந்தார்.

- தியாகராஜரை சரபோஜி மன்னன் அவைக்கு அழைத்த போது அதனை மறுத்து கீர்த்தனை மன்னனது தவறை உணரச்செய்து மன்னிப்புக் கேட்க வைத்து அவருக்கு ஏற்பட்ட வயிற்று வல நீக்கியமை.

மேற்குறிப்பிட்ட விடயங்களுள் எவையேனும் இரண்டினையும் குறிப்பிட்டிருப்பின்

(04 புள்ளி

v. - வெங்கடரமண பாகவதர்

எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளி

Department of Examinations - Sri Lanka

மொத்தப் புள்ளிகள் 1 + 1 + 2 + 2+ 4+ 2 = 12 புள்ளிக

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா 6 இற்கான குறிக்கோள்**

| |
|---|
| கொடுக்கப்பட்ட அலங்காரத்தினை ஸ்வரதாளக் குறியீட்டுடன் பூர்த்தி செய்து எழுதுவர். |

6. பின்வரும் அலங்காரத்தினைப் பூர்த்தி செய்க.

| $I_5$ | 0 | $I_5$ | $I_5$ |
|---|---|---|---|
| ஸரீகம । | கரி । | ஸாரிகரி । | ஸாரிகம ॥ |

| $I_5$ | 0 | $I_5$ | $I_5$ |
|---|---|---|---|
| ஸரீகம | கரி | ஸாரிகரி | ஸாரிகம // |
| ரிகாமப | மக | ரீகமக | ரீகமப // |
| கமாபத | பம | காமபம | காமபத // |
| மபாதநி | தப | மாபதப | மாபதநி // |
| பதாநிஸ் | நித | பாதநித | பாதநிஸ் // |
| ஸ்நீதப | தநி | ஸ்நாநிதநி | ஸ்நாநிதப // |
| நிதாபம | பத | நீதபத | நீதபம // |
| தபாமக | மப | தாபமப | தாபமக // |
| பமாகரி | கம | பாமகம | பாமகரி // |
| மகாரிஸ | ரிக | மாகரிக | மாகரிஸ // |

இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா 7 இற்கான குறிக்கோள்**

பண்ணிசையின் தோற்றம், வளர்ச்சி அவற்றின் வகைகள், பண்களும் இவற்றிற்கு இ இராகங்களையும் குறிப்பிடுவர்.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் கலாசாரப் பின்ன ஆராய்ந்து விளக்குவர்.

7. (i) பண்ணிசையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விவரிக்குக.

(ii) பண்களின் வகைகளை விவரிக்குக.

(iii) பண்களையும் அவற்றிற்கு இணையான இராகங்களையும் தருக.

**அல்லது**

இந்தியாவில் கர்நாடக இசை வரலாற்றில் 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளின் கலாசாரப் பின்ன ஆராய்க.

Department of Examinations - Sri Lanka

i. - இந்திய சங்கீத வரலாற்றில் இராக தாள அமைப்புடன் கூடிய பழமையான உருப்படி தேவாரம்

- கி.பி 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தோன்றி பண் வளர்த்தனர். அத்துடன் தேவார பண்ணின் வர்ண மெட்டுக்களை ஓதுவார் மூலமும் குரு சிஷ்ய மூலமும் வளர்ச்சியுற்று காப்பற்றப்பட்டு வந்தன.

- சோழ அரசர்கள் ஓதுவார்களை அமர்த்தி அவர்கள் மூலம் நாடு முழுவதும் தேவார பாடப்பட்டன.

- தேவார பதிகங்களுக்கு தனிச்சுவையும் பிரகாசமும் இருப்பதோடு கேட்போருக்கு பக்தி உண்டாகின்றது.

- பண்களில் இராகங்களைப் போல் ஜீவ ஸ்வரங்கள், நியாய ஸ்வரங்கள், அந்நிய சொரூபத்தை விளக்கும் நுட்ப கருத்துக்கள், கமகங்கள் என்பன காணப்பட்டமை.

- பண் என்பது தாய் இராகம் என்றும் திறம் என்பது ஜன்னிய இராகம் என்றும் கூறப்பட்டது. பாஷாங்க ராகம் முதன்முதலில் பண்ணிசையிலேயே காணப்பட்டது.

- தற்காலத்தில் 24 பண்கள் வழக்கத்தில் உள்ளன.

மேற்குறித்த விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (03

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ii. பகற் பண்

- புறநீர்மை
- பஞ்சமம்
- இந்தளம்
- காந்தார பஞ்சமம்
- தக்கேசி
- பழம்பஞ்சுரம்
- நட்டபாடை
- கொல்லி
- பழந்தக்க ராகம்

**இராப் பண்**

- சீகாமரம்
- வியாழக்குறிஞ்சி
- அந்தாளிக் குறிஞ்சி
- மேகராகக் குறிஞ்சி
- கொல்லி
- பழந்தக்கராகம்

**பொதுப் பண்**

- செந்துருத்தி
- செவ்வழி

இவ்வாறு பண்களின் வகைகளைக் குறிப்பிட்டு, பொருத்தமான ஒரு பண்ணினை உதாரணமாக எழுதியிருப்பின்

(03 புள்ளிகள்)

iii.

| பண் | இராகம் |
|---|---|
| பஞ்சமம் | ஆகிரி |
| சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| புறநீர்மை | பூபாளம் |
| வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | பைரவி |
| செந்துருத்தி | மத்தியமாவதி |
| காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை |
| அந்தாளிக்குறிஞ்சி | ஸாமா |
| தக்கேசி, தக்கராகம் | காம்போதி |
| செவ்வழி | யதுகுலகாம்போதி |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| கொல்லி, கொல்லிக்கௌவாணம்<br>காந்தாரம், பியந்தைக் காந்தாரம் | நவரோஜ் |
| மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

| | |
|---|---|
| நட்டபாடை | கம்பீரநாட்டை |
| சாதாரி, நட்டராகம் | பந்துவராளி |
| யாழ்முரி | அடாணா |
| இந்தளம் | மாயாமாளவகௌளை |
| பழந்தக்கராகம் | ஆரபி |
| குறிஞ்சி | ஹரிகாம்போதி |

எவையேனும் 6 பண்களும் பொருத்தமான இராகங்களும் குறிப்பிட்டிருப்பின் 06 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் $3 + 3 + 6 = 12$ புள்

**அல்லது**

- 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியானது பல்லவர் ஆட்சிக்காலமாகும்.
- சங்கமருவிய காலச் சமயநிலை

  ஆரம்ப காலம் – மதங்கள் பகைமையின்றிய நிலை

  இறுதிக்காலம் – சமண சமயம் உயர்நிலை

  பின்னர் சைவமும் வைணவமும் ஒன்றுபட்டு சமணத்தை எதிர்த்தமை.
- சமண மன்னர்களை சைவர்களாக்கியமை.

  மகேந்திரவர்மன் – திருநாவுக்கரசரால் மதமாற்றம்.

  நின்றசீர்நெடுமாறன் – சம்பந்தரால் மதமாற்றம்
- சைவம் வைணவம் மீண்டும் தளைத்தமை.
- பக்தி இலக்கியங்கள் தோன்றியமை.
- நாயன்மார்களின் இசைப்பணி – பன்னிரு திருமுறைகள் தோற்றம்
- ஆழ்வார்களின் இசைப்பணி – திருப்பாசுரங்கள் தோற்றம்
- பல்லவர் ஆட்சிக்காலத்தில் கலைகளின் உன்னத வளர்ச்சி
- சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, சாஸ்திரியக் கலை என்பன வளர்ச்சி அடைந்தமை.
- மகேந்திரவர்மனின் இசைப்பணி

  "விசித்திரசித்த", "சங்கீர்ண" போன்ற விருதுகள்
- நாட்டுப் பாடல்கள் தழுவிய பதிகங்கள் தோன்றியமை.
- இசைக்கல்வெட்டுக்கள்

இவ்வாறு 12 விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் 12 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் $= 12$ புள்

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/